(4)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432ம் பசலி கற்கண்டு சப்ளைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432-க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| **வரிசை எண்** | **சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட )**<br>**ரூ. பை** |
|---|---|---|
| 1 | டைமண்ட் கற்கண்டு 4.75 mm to 5.50 mm சப்ளை செய்ய கிலோ ஒன்றுக்கு விலை | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.

2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (**PAN CARD)& GST** சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

1432-ம் பசலிக்கு பஞ்சாமிர்தம் தயார் செய்ய டைமண்ட் கற்கண்டு 4.75 mm to 5.50 mm சப்ளை செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 01.07.2022 முதல் 30.06.2023-ம் தேதி முடியவுள்ள 1432-ம் பசலிக்கு இத்திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயார் செய்யத்தேவையான நல்ல தரமான, சுத்தமான நயம் டைமண்ட் கற்கண்டு சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022ம் தேதி பிற்பகல் 3.00 மணி அளவில்** ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய இனத்தின் விவரம்**

பஞ்சாமிர்தம் தயார் செய்ய தேவையான நல்ல தரமான, சுத்தமான நயம் டைமண்ட் கற்கண்டு 4.75 mm to 5.50 mm என்ற அளவில் சப்ளை செய்தல்

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் கிலோ ஒன்றுக்கு நல்ல தரமான, சுத்தமான, நயம் டைமண்ட் கற்கண்டு விலை குறிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி விலையினை எண்ணாலும் மற்றும் எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி, வருமான வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேற்படி வரித்தொகை ஒவ்வொரு பட்டியலிலும் பிடித்தம் செய்து பட்டியல் வழங்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியில் தெளிவாக ஒப்பந்தப்புள்ளிதாரரின் முழு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக **ரூ.5,00,000/-** (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2 01.05.2022-ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான **ரூ.5,00,000/-**க்கான (ரூபாய் ஐந்து லட்சம்) அசல் சால்வன்சி சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையாகவும் செலுத்தலாம்.

3 ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் அட்டையின் நகல் (PAN CARD)& GST நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளியுடன் ஒப்பந்தப்புள்ளிதாரர் 1432-ம் பசலி முழுவதும் சப்ளை செய்வதாக இருக்கும் நல்ல தரமான, சுத்தமான, நயம் மாதிரி டைமண்ட் கற்கண்டு ½கிலோ அளவு பாக்கெட்டுகள் இரண்டையும், தரச்சான்றிதழ்களையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மாதிரி, தரச்சான்றிதழ் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. கடந்த நிதியாண்டில் (01.04.2019 முதல் 31.03.2022 வரை) வியாபாரத்தில் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) குறையாமல் வரவு செலவு செய்ததற்காக வருமான வரித்துறையில் தாக்கல் செய்த **Balance Sheet** பட்டய கணக்கரால் **(Chartered Accountant)** மேலொப்பம் **(Attested)** செய்யப்பட்ட நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்கப்பட வேண்டும். மேலும் வருமான வரி செலுத்தியதற்கு **(Income Tax)** சான்றின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளிதாரர் கற்கண்டு விற்பனையில் குறைந்தது 3 ஆண்டுகளாவது வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிமச் சான்று நகல் ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டாயம் இணைக்க வேண்டும்.

7. ஒப்பந்ததாரர் நிறுவனம் தனியாள் (Proprietorship) அல்லது பங்குதாரர் நிறுவனம் (Partnership Firm) அல்லது தனியார் / பொது நிறுவனம் (Private/Public Limited) என எவ்வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த சான்று இணைக்கப்பட வேண்டும்.

8. ஒப்பந்ததாரர் 21 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். இதற்கான சான்றாக கல்விச்சான்று, பிறப்பு சான்று, வாக்காளர் அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், ஆதார்அட்டை போன்ற ஆவணங்களில் ஏதாவது ஒன்றின் நகலினை சான்றாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

9. மேற்காணும் வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

10. ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

11. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் சப்ளை செய்வதாகக் குறிப்பிட்டுள்ள பொருளின் விபரத்தை ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் குறிப்பிட வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

13. பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான காலத்தில் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மாதிரிப்படியே கற்கண்டை தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். ஒப்பந்தப்புள்ளியுடன் கொடுத்த மாதிரிக்கு தரம் குறைவாக கற்கண்டு இருக்குமாயின் அதை நிராகரிக்க தொடர்புடைய அலுவலருக்கு உரிமையுண்டு. அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிமார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.மேலும், ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

14. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஐயப்ப பக்தர்கள் வருகை காலமான "ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள்", "தைப்பூசம்", "பங்குனி உத்திரம்" போன்ற திருவிழா காலங்கள், கோடை விடுமுறை மற்றும் விசேட காலங்களில் பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளர் வழங்கும் கொள்முதல் கேட்பு சீட்டு அளவின்படி தவறாது தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க வேண்டும்.

15. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் நல்ல தரமான, சுத்தமான, பஞ்சாமிர்தம் தயாரிக்கக்கூடிய அளவிலான நயம் டைமண்ட் கற்கண்டினை 50கிலோ எடை கொண்ட சிப்பங்களாக பேக் செய்து - பஞ்சாமிர்தம் தயார் செய்யப்படும் பிரிவிற்கு தனது சொந்தப் பொறுப்பிலும் மற்றும் செலவிலும் கொண்டு சென்று பிரிவுப்பொறுப்பாளர் முன்னிலையில் எடைபோட்டு வழங்கப்பட வேண்டும்.

16. சப்ளை செய்ததற்கான பட்டியல் பெற நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்த காலதாமதத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தங்குதடையின்றி சப்ளை செய்யப்பட வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433ம் பசலி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து கற்கண்டு சப்ளை செய்ய வேண்டும்.

17. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது.

18. பஞ்சாமிர்தப்பிரிவிற்குத் தேவையான நல்ல தரமான, சுத்தமான, நயம் கற்கண்டினை தேவையான காலங்களில் தேவைக்கேற்ப சப்ளை செய்யாவிட்டால் ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

19. தேவையான அளவிற்கு உரிய காலத்தில் வழங்கிட காலதாமதம் செய்தாலோ அல்லது ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படின் இத்திருக்கோயிலுக்குத் தேவையான நல்ல தரமான, சுத்தமான, நயம் டைமண்ட் கற்கண்டை வெளி மார்க்கெட்டிலோ, கூட்டுறவு அங்காடியிலோ , விலைப்புள்ளி மூலமோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி மூலமோ கொள்முதல் செய்யப்படும். இதனால், திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் அந்த இழப்புத்தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% பில் தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை பிடித்தம் செய்யப்படும். தவறினால், ஒப்பந்தபத்திர நிபந்தனைகளின்படியும் சட்ட விதிகளின்படியும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

20. ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் நடைமுறை விதிகளுக்கும் மற்றும் இந்து சமய அறநிலைய சட்டதிட்டங்களுக்குட்பட்டும் கற்கண்டை சப்ளை செய்ய வேண்டும்.

21. சப்ளை செய்யப்படும் நல்ல தரமான, சுத்தமான, நயம் கற்கண்டிற்கு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்த பிறகு ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா என பரிசீலனை செய்து இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப்பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

22. எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவோ, நிராகரிக்கவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாருக்கு கிடையாது.

23. ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

24. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவரின் ஒப்பந்தப்புள்ளியை, சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படும் வரை வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

25. ஆணையரால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

26. 1432-ம் பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று நல்ல தரமான, சுத்தமான, நயம் டைமண்ட் கற்கண்டு சப்ளை செய்த வகையில் தணிக்கைத்தடை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரரின் வைப்புத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின் , அதனை பிணை வைப்புத்தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

27. ஒப்பந்தப்புள்ளிதாரர் வணிகவரித்துறையினரிடமிருந்து உரிய உரிமம் பெற்றிருக்க வேண்டும். நல்ல தரமான, சுத்தமான, நயம் டைமண்ட் கற்கண்டு சப்ளை செய்வதற்காக கொண்டு வரப்படும் சமயத்தில் வணிக வரித்துறையினரால் ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவற்றிற்கு ஒப்பந்தப்புள்ளிதாரரே அவரது சொந்த பொறுப்பில் தீர்வு காணவேண்டும்.

28. சப்ளை செய்யப்படும் காலத்தில் வரிவிகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும் ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே டைமண்ட் கற்கண்டு ஒப்பந்தக்காலம் முடியும்வரை ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட வேண்டும்.

29. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

30. மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவர்களையோ, இந்துக்கள் அல்லாதவர்களையோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

31. ஒப்பந்தப்புள்ளி தேதி, நேரம் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

/5/

32. திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக ஒப்பந்தத்தை துய்க்க கூடாது. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு அறிந்தும், தெரிந்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாகவே கருதப்படுவார்கள்.

33. திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுவபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள், ஒப்பந்தப்புள்ளிகளை பசலி காலம் முடிய பூர்த்தி செய்யாதவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.

34. டெண்டர் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

35. ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலர் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

36.சப்ளை செய்யும் கற்கண்டின் தரம் FSSAI விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

37. இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளர்
30/5/22